9 அக்டோபர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 28 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**செபமாலை அன்னையின் தினம் (07-10-2022)**

# நன்றியுணர்வு என்னும் மனப்பான்மையை தழுவிக்கொள்ளுதல்

**ஒரு தாயும் அவரது மூன்று மகன்களையும் பற்றிய கதையை ஒரு அதிச ஒன்றுகூடுதலில் பகிர்ந்துகொண்டனர்**

வேலைக்குச் செல்லும் ஒரு தாய், வேலையையும், குடும்பத்தையும் சமாளித்து நடத்திச் செல்வது எப்போதுமே தொடர்ச்சியான சவாலாகும். வாரத்தின் பல நாட்கள் பெற்றோர்கள் இல்லாமல் குழந்தைகள் மட்டுமே மேசையில் அமர்ந்து உணவருந்துவது இயல்பாக நடப்பது.



ஆனால் வார இறுதி நாட்களில் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணும்போது, இரண்டாவது குழந்தை மட்டும் 'அம்மா இந்த உணவுக்கு நன்றி' என்று சொல்லிவிட்டுத் தான் இடத்தைவிட்டு அகலும்.

ஒருநாள் என் இரண்டாவது குழந்தையோடு நான் தனியாக இருந்தபோது, அவனிடம் 'நீ சொல்லும் இந்த நன்றியுள்ள வார்த்தைகள் என் கடினமான நாளை மகிழ்ச்சிகரமாக மாற்றுகிறது என்று சொன்னதும் அவன் என்னைக் கட்டிப்பிடித்து, 'அம்மா நான் உங்களை அன்பு செய்கிறேன்' என்று கூறினான்.

இன்றைய முதல்வாசகத்தில் (2 அரசர்: 5) சிரியாவின் படைத்தலைவன் நாமான் தொழுநோயிலிருந்து குணமடைந்ததைப் பற்றி நாம் வாசிக்கிறோம். முதலில் அவரிடம் கூறப்பட்ட வழிமுறைகளை அவர் பின்பற்றத் தயங்கினாலும், அதை நிறைவேற்றியபின் அவர் முழுமையாகக் குணம் பெற்றார். அதன்பின் இஸ்ராயேலின் கடவுளே உண்மையான கடவுள் என்று அறிக்கையிட்டார்.நற்செய்தியில் (லூக்கா 17) இயேசுவால் குணமடைந்த பத்து தொழுநோயாளிகளில் ஒருவர் மட்டுமே தான் குணம் பெற்றதற்காக கடவுளைப் போற்றிப் புகழ திரும்பி வந்தார்.

இங்கு கூறப்பட்டிருக்கும் வார்த்தைகள், நமக்கு நம்பிக்கையை எடுத்துச் சொல்கின்றன. நாம் பெற்றுக்கொண்ட மீட்புக்கு நன்றியுணர்வு நிறைந்தவர்களாகவும், அனைத்து நாடுகளுக்கும் மீட்பின் பாதையைக் காட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக முன்னோக்கி சென்று கிறிஸ்துவைப் பின்பற்றும் சீடர்களாகவும் மாறுவோம். இதையே புனித பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் கடிதத்தில் குறிப்பிடுகிறார். (2 தீமோ 2:10) தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் மீட்பையும் அதனோடு இணைந்த என்றுமுள்ள மாட்சியையும் கிறிஸ்து வழியாக அடையுமாறு அனைத்தையும் பொறுத்துக் கொள்கிறேன்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தம்முடைய புதன் கிழமை பொது மறையுரையில் (30-12-2020) கத்தோலிக்கர்கள் தங்களது நன்றியை சுமப்பவர்களாக இருப்பதன்மூலம் இந்த உலகை மாற்றமுடியும்" ஏனெனில் நமது நம்பிக்கை சிறிதளவே இருந்தாலும் நம்மால் பிறருக்கும் அதை கடத்தமுடியும்

நட்புறவையும் கட்டியெழுப்பவும், , உறவுகளை உருவாக்கவும் நன்றியுணர்வு என்னும் நல்லொழுக்கத்தை நாம் வளர்த்துக்கொண்டால், அதுவே வலுவூட்டும் பசையாக உதவுகிறது. அதிச ஒன்றுகூடலில் பகிர்ந்துகொண்ட அந்த நன்றியுணர்வு மிக்க குழந்தையைப் போல, ஒரு நபரைப் பற்றி சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம், இதுபோன்ற நன்றியுணர்வை நாமும் பிறருக்குத் தெரிவிக்க நீங்களும் முயற்சி செய்யுங்கள். இந்த நன்றியுணர்வு உங்கள் வாழ்க்கையில் வேரூன்றியிருக்கட்டும். அதன்பின் அது ஏற்படுத்தும் மாற்றத்தை நீங்கள் காண்பீர்கள்.

இயேசு தம்முடைய காயங்களால் நம்முள்ளேயும் வெளியேயும் இருக்கும் தொழுநோய் போன்ற காயங்களை குணப்படுத்தினார். தாம் குணம்பெற்றதை அறிந்து ஆண்டவருக்கு மகிழ்ச்சியோடு நன்றி செலுத்தவந்த அந்த தொழுநோயாளியைப் போல நாமும் நன்றியோடு பாடுவோம். "ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்.. ஆண்டவர் தம் மீட்பை வெளிப்படுத்தினார். (திருப்பாடல் 98)

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி செலுத்துங்கள். உங்களுக்காகக் கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே

(1 தெச: 5: 18)

**இன்றைய வாசகங்கள்:**

2 அரசர் 5: 14-17;
திபா: 98:1-4;
2 தீமோத்தேயு 2: 8-13;
லூக்கா: 17: 11-19.

INTERNAL CIRCULATION ONLY
BUL 41/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org